**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 727 /2021**

2025- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ம் நாள் திங்கள்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வகுமாரி | தொழில் | : | விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | முருகையன் | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | மூங்கில் பாடி | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 46/2025 |

**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை** :-

நான் தாவா வழக்கில் பிரதிவாதி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். கடந்த 02.07.2025 ஆம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட தாவா சொத்திற்கான வில்லங்கச் சான்று கணிணி நகல் **பி.வா.த.சா.ஆ 1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. தாவா சொத்திற்கான 1 ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள அ-பதிவேடு கணிணி நகல் **பி.வா.த.சா.ஆ 2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. 1 ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரைய பத்திரம் ஆவண எண் 1699/2020 சான்றிட்ட நகல் **பி.வா.த.சா.ஆ 3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. 1 ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள தாவா சொத்திற்குண்டான பட்டா எண் 2439 உண்டான கணிணி பட்டா **பி.வா.த.சா.ஆ 4 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. (வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபணையுடன் மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.)

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. இந்த நீதிமன்றத்தில் இறந்துபோன 1-ம் வாதி குமரேசன் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு போட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குமரேசன் போட்ட வழக்கிற்கு நான் என்ன பதில் கட்சியை சொல்லியுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரம் நான் சொன்னது தான் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் வழக்கு பட்டா பாஸ்புத்தகம் சட்டத்தின்படியும் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொல்லி உள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன்.

2. நான் தனியாக Or 7 R 11(d) சி.பி.சி படியும் மனு தாக்கல் செய்யவில்லை என்றாலும் பிராது தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். Or 7 R 11(d) சி.பி.சி யின் விளக்கம் என்னவென்று தெரியுமா

DMJUM COURT, KUNNAM

என்றால் எனக்கு தெரியாது. சட்டப்பிரிவுகள், பட்டா பாஸ்புத்தகம் குறித்து எனது வழக்கறிஞர் சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் ஆமாம். நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் வாதியின் 80(2) ன் படி முறைப்படி நோட்டீஸ் அனுப்பவில்லை என்பதால் ஆரம்த்திலேயே தள்ளுபடி வழக்காகும் என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். யாருக்கு எதிராக நோட்டீஸ் அனுப்பவேண்டும் என்று முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

3. ஆரம்பத்தில் தாவா சொத்து அரசு புறம்போக்கு என்று UDR A Register ல் இருந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சொல்லி இருப்பேன் மறந்துவிட்டேன். UDR A Register ல் இருந்தது என்பதற்கு ஆதரவாக நான் சான்று ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆரம்பத்தில் UDR A Register ல் அரசு புறம்போக்கு என்பதற்கு சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் வருவாய் சட்டம் மற்றும் நடைமுறைப்படி மேற்படி இடம் தனிநபருக்கு மாற்றம் செய்ய தகுதி உடைய இடம் என்று சொல்லி உள்ளேனா என்றால் மறந்துவிட்டேன்.

4. எனக்கு ஞாபக மறதி நோய் உள்ளது என்றும் அதற்காக மருந்து ஏதேனும் சாப்பிடுகிறேன் என்றால் அதுபோல் எனக்கு எந்த நோயும் இல்லை. நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் 29.05.1992 ம் தேதியன்று வழக்கு சொத்து ராஜமாணிக்கம் என்பவருக்கு கணிணி பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். மேற்படி எந்த ஆவணத்தையும் நான் தாக்கல் செய்யவில்லை வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சர்வே எண். என்ன என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டுக்காரருக்கும் என் மகனுக்கும் தான் தெரியும்.

5. சொத்து விஸ்தீரணம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் 3 ஏக்கர் ஆகும். ராஜமாணிக்கம் அனுபவித்தார் என்பதற்கு சான்றாக வருவாய் துறையிடம் சாகுபடி அடங்கல் பதிவேடு எடுத்து தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தெரியாது, எனது கணவருக்குதான் தெரியும். ராஜமாணிக்கம் அடமானம் செய்த பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை எனக்கும் தெரியாது. ராஜமாணிக்கம் இறந்ததேதி தெரியுமா என்றால் தெரியாது. சர்டிபிகேட்டையும் நான் பார்க்கவில்லை அவர்களை கேட்டால் தெரியும் அவர்கள் யாரென்றால் எனது கணவர் ஆவார்.

6. எந்த தேதி என்ன சர்வே எண்ணுடைய சொத்தை யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் தேதி, சர்வே எண் எனக்கு தெரியாது, யாரிடம் இருந்து வாங்கினேன் என்றால் கலைவாணி, கார்த்திக், மற்றும் ஒரு பெண் ஆவார். நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் Na.Ka. A2/4008/2020 சான்று பற்றி தெரியுமா என்றால் தெரியாது. சொத்தை விற்றார்கள் நான் வாங்கினேன். நான் எனது முதன்மை வாக்குமூலத்தில்

DMCUIMCOURTKUNAM

கிரையம் பெற்றபிறகு வழக்கு சொத்தினை வருவாய் ஆவணமாக பட்டா எண். 2439 என மாற்றம் செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு நினைவில்லை. வழக்கிற்கு மூலக்காரணமாக எனக்கு எந்த வகையில் இடைஞ்சல் செய்ய முற்பட்டார் என்று சொல்லவில்லை என்றால் உழுத கொல்லையில் தகராறு செய்தார்.

7. நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் மாண்புமிகு நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எல்லாமே கொடுத்துள்ளோம். வாதி வழக்கு சொத்தின் எந்த நாளும் அனுபவத்தில் இல்லை என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் 4 வருடமாக அனுபவம் செய்து வருகிறேன். நான் பயிர் செய்த பருத்தி, சோளம் அதற்கான சாகுபடி அடங்கலையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்திருப்பார்கள். எனக்கு வழக்கின் நேரடி விபரம் எதுவும் தெரியாது என்றும் எனது கணவருக்குதான் வழக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது கணவர் தரப்பாளர் இல்லை என்றால் சரிதான்.

8. நான் சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வா.எண். 730/2021 வழக்கிற்கு வழக்கு விபரம் யார் சொன்னார் என்றால் எனது கணவர் சொல்லவில்லை நான்தான் சொன்னேன். மேற்படி வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் நான் வாங்கிய நிலத்திற்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று கேட்டுள்ளேன். நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணம் மற்றும் வழக்கு சொத்திற்கு சம்மந்தம் இல்லாத ஆவணம் என்று எதை பார்த்து சொல்கிறேன் என்றால் எனக்கு தெரியாது. ராஜமாணிக்கம் வாரிசுகள் ஒதியம் கிராமத்தில் இருந்தார்கள் என்பதற்கு சான்றாக ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

9. தற்போது ராஜமாணிக்கத்தின் வாரிசுகள் வெளியூரில் இருப்பதற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் எனது முதன்மை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எந்த தேதியில் எனது வழக்கறிஞர் மூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சுமார் 3 ,4 மாதங்கள் ஆகும். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ள பத்திரம் ஆவண எண். 1699/2020 என குறிப்பிட்டு சொல்லி தாக்கல் செய்துள்ளேன் என்றால் கொடுத்திருக்கிறோம் என்னைக்கு கொடுத்தேன் என்று தெரியாது. மேற்படி ஆவணம் அசல் பத்திரம் இல்லை என்றால் சரிதான், ஜெராக்ஸ் கொடுத்துள்ளேன்.

10. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் ஆவண பட்டியலில் உள்ள வரிசை எண். 2 மற்றும் 4 ஆக சொல்லியுள்ள ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்லி இருக்கிற மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்துமே இணையவழியில் கணினி மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் வீட்டில் உள்ளது. அசல் ஆவணங்கைள நீதிமன்றத்தில் எதிர் வரும் வாய்தா தேதிகளில் வீட்டில் உள்ள ஆவணங்களை தாக்கல் செய்வேன் என்றால் எனது வழக்கறிஞர் மூலம் தாக்கல்

DMC UDUMALPETTAI
DMCUDUMALPETTAI... 

செய்கிறேன். எனக்கு ஞாபகம், மறதி, எல்லாம் இல்லை என்றும் வழக்கிற்காக வாதியின் கட்சியை மறைக்க வேண்டும் என்பதற்காக தெரியவில்லை, ஞாபகம் இல்லை, மறதியாக உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சொல்லவில்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM